# 4 சரவணப் பெரியவன் புள்ளி கல்தொட்டிக் கல்வெட்டு

வ.உ. சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், சரவணப் பெரியவன் புள்ளி என்றசிற்றூரிலுள்ள மணல்தேரியில் சுந்தர நாச்சியார் கோயில் என வழங்கப் படும் கற்கோயில் உள்ளது. கி.பி. 14—15 ஆம் நூற்றாண் டில் கட்டப்பட்டதெனக் கருதத்தக்க இக்கோயிலில் கல் வெட்டுகள் இல்லை. ஆனால் கோயிலுக்கு வெளியே உள்ள கல்தொட்டியில் கலவெட்டு உள்ளது. இப்பகுதி மணல் தேரியாதலால் குடிநீர் கிடைப்பது அரிது. எனவே இக் கோயிலுக்கு வழிபட வருவோர் பயன்படுத்திக் கொள்வதற்காகவும், ஆடுமாடுகள் நீரருந்திச் செல்ல வசதியாகவும் வேறு இடங்களிலுள்ள கிணறுகளிலிருந்து நீரிறைத்துக் கொணர்ந்து நிரப்பிவைப்பதற்காக இக்கல் தொட்டி செய்து வைக்கப்பட்டது போலும். இக்கல்

வெட்டு பற்றித் தகவல் தெரிவித்தவர் நெல்லை நெடுமாறன் அவர்கள் ஆவார்.

எழுத்து : தமிழ்
காலம் : கி.பி. 1600 (கொல்லம் ஆண்டு 775, சித்திரை 27.)

## சிறப்பான குறிப்புகள்

இக் கல்வெட்டின் திளைக் குடுக்கைக் கிணறு என்ற ஊரிலிருக்கும் அரங்கன் செம்பிராப் பணிக்கன் என்பவர் குறிப்பிடப்படுகிறார். இவ்வூர் தற்பேர்து குடுவைக் கிணறு எனப்படுகிறது. செண்பக ராமப் பணிக்கன் என்பதே செம்பிராப்பணிக்கன் என மருவியுள்ளது போலும் இவரைப்பற்றி, 'மண்டங்குடி வரலாறு' என்ற நாடார்குலப் பழங்கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.) இவரது பெயரோடு தொடர்புடைய செம்பிராக்குளம் (செம்பறிக்குளம்), பணிக்க நாடான் குடியிருப்பு ஆகிய ஊர்கள் இப்பகுதியில் உள்ளன.

## கல்வெட்டு வாசகம்

1) எளஎயரு ஷூ சித்திரை மீ
உயஎ ௳ திளைக் குடுக்கை கி
ணத்திலிருக்கும் அரங்
(க)ன் செம்பிராப் பணிக்கன்
(தொ)ட்டி தன்மம்